1981 மே 9]

''மானியக் கோரிக்கை எண் 56, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,55,75,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

1. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவையின் முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. தகவல் கோரல்

கள்ளுக்கடைகள் திறப்பை சில மாதங்கள் ஒத்திவைத்தல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் பலமுறை சொன்னோம், இந்த கள்ளு சாராயக் கடைகளைத் திறக்க வேண்டாம், கொஞ்சம் தள்ளி வையுங்கள் என்று சொன்னோம். அதையும் கேட்காமல் நம்முடைய அமைச்சரவை கொண்டு வந்தது. இப்போது அதைக் கொஞ்சம் நிதானமாகச் செய்யலாம் அவசரக் கோலமாக அந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவோமானால், அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிடைக்காது. ஆகையினாலே இதை ஒரு மாதம் 2 மாதம் தள்ளிப் போடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இதற்கு ஏதாவது வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.